# பொய்யா விளக்கு

விளக்கு 7 சுடர் 2

ஒளி 3

ஈழ
N627.2
145371

A32/1.62. 738


# பொய்யா விளக்கு

"உலகின் ஒளி நாமே!" – கிறிஸ்துநாதர்.

விளக்கு : 7 சுடர் : 2

பெப்ருவரி, 1962


1962

## பாவம்

### 1. ஜென்மப் பாவம்

**1. பாவம் என்றால் என்ன?**

தேவ கட்டளையை மனது பொருந்தி மீறுகிறதே பாவம்.

**2. பாவங்களை எத்தனை வகைப்படுத்தலாம்?**

ஜென்மப் பாவம், கர்மப் பாவம் என இரு வகைப்படுத்தலாம்.

**3. ஜென்மப் பாவம் என்றால் என்ன?**

ஆதித் தாய் தகப்பனாலே உண்டாகி, நம்மோடு பிறக்கிற பாவத்தை ஜென்மப் பாவம் என்கிறோம். சிங்காரத் தோப்பிலே ஆதாமும் ஏவாளும் கடவுளின் கட்டளையை மீறி முதல் பாவத்தைப் புரிந்தனர். அவர்களிடமிருந்து ஜென்மிக்கும் நாம், அவர்களது மக்கள் என்ற முறையில், அதே பாவத்தின் விளைவுகளுக்கு இலக்காகிறோம். அந்தப் பாவத்தையே ஜென்மப் பாவம் என்கிறோம்.

**4. அப்படி ஆதாமும் ஏவாளும் செய்த பாவம்தான் என்ன?**

ஆதாமையும் ஏவாளையும் படைத்த கடவுள், அவர்களை ஒரு சிங்காரத் தோப்பில் வாழச் செய்தார். அங்கு இன்பம்

தரும் மலர் வகைகளுக்கும் இனிமை தரும் பழ வகைகளுக்கும் குறைவில்லை. "எல்லாப் பழங்களையும், சாப்பிடுங்கள்!" என்ற இறைவன், ஒரே ஒரு மரத்தை மட்டும் சுட்டிக் காட்டி, "இந்த ஒரு மரத்தின் பழங்களை மட்டும் தொட வேண்டாம்!" எனப் பணித்திருந்தார். ஆனால், ஒரு நாள் ஏவாளும், அவளைத் தொடர்ந்து ஆதாமும் அந்த மரத்தின் பழங்களைப் புசித்தனர். இதுதான் அவர்கள் செய்த பாவம்.

**5. உலக தொடக்கத்தில் நடந்த இந்த வரலாறு நமக்கு எப்படித் தெரியும்?**

பைபிளின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தில் இவ் வரலாற்றை நமக்கு விரிவாகத் தருகிறார் மோசேஸ் முனிவர்.

**6. இதனால் ஆதாமும் ஏவாளும் தண்டிக்கப் பெற்றனரா?**

ஆம். இறைவன் அவர்களை "பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தில்" படைத்திருந்தார். எண்ணற்ற நற்கொடைகளால் அவர்களை நிரப்பியிருந்தார். முதல் பெற்றோரின் பாவத்தின் காரணமாக, அந்த மேலான நிலையிலிருந்து மனுக்குலம் முழுவதும் தள்ளப்பட்டது; பல அரிய கொடைகளை இழந்தது.

**7. அந்த "எண்ணற்ற கொடைகளில்" சிலவற்றையாவது கூறுங்களேன்!**

"சர்வப் பிரசங்கி ஆகமம்" (பைபிளில் ஒரு புத்தகம்) அந்த அரிய கொடைகளைப்பற்றிக் கூறுகிறது. அப்புத்தகத்தில் 17-ம் அதிகாரத்தில் உள்ள ஒருசில வசனங்களைக் கவனியுங்கள்.

1. கடவுள் மண்ணால் மனிதனை உண்டாக்கினார்; தமது சாயலாக அவனைச் சிருஷ்டித்தார்.
2. நாட்களின் தொகையையும் காலத்தையும் அவனுக்குக் குறித்தார்; பூமியில் உள்ளவைகளின்மட்டில் அவனுக்கு அதிகாரம் கொடுத்தார்.

145371.



3. சகல ஜெந்துவும் அவனுக்குப் பயப்படும்படி திட்டம் செய்தார்; அவனும் மிருகங்கள்மேலும் பறவைகள் மேலும் அதிகாரம் செலுத்தினான்.
4. அவனிடத்தினின்று அவனைப்போலவே அவனுக்கு ஒரு துணை உண்டுபண்ணினார்.

   அறிவையும், நாவையும், கண்களையும், காதுகளையும், நினைப்பதற்கு மனதையும் அவர்களுக்குக் கொடுத்தார்; புத்தியின் ஒளியில் அவர்களை நிரப்பினார்.

5. ஞான அறிவையும் அவர்களுக்குத் தந்தார்; அவர்கள் இதயத்தைப் புத்தியினால் நிரப்பியருளினார்; நன்மையையும் தீமையையும் அவர்களுக்குக் காண்பித்தார்.
6. தமது செய்கைகளின் மகத்துவத்தை அவர்களுக்குக் காண்பிக்க அவர்கள் இருதயங்களின்மேல் தமது கண் வைத்தார்.
7. தம் பரிசுத்த நாமத்தை அவர்கள் கொண்டாடவும், அவர்கள் தமது செய்கைகளின் மகத்துவத்தைப் பிரசித்தப்படுத்துவதால் தமது அற்புதச் செய்கைகளில் மகிமைப்படுத்தப்படவும் திருவுளம் கொண்டார்.
8. அவர்களுக்கு நன்மார்க்கத்தை ஏற்படுத்தி, சீவிய காலத்தின் ஒழுங்குக்கு அவர்களைச் சுதந்தரவாளிகள் ஆக்கினார்.
9. அவர்களோடு நித்திய ஒப்பந்தம் செய்துகொண்டார்; தமது நீதியையும் தீர்மானங்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.
10. அவரது பெருமையின் மகத்துவங்களை அவர்கள் கண்கள் கண்டன, அவரது குரலின் மேன்மையை அவர்கள் செவிகள் கேட்டன; இன்னமும் "சகல அநியாயத்தையும் விலக்குங்கள்!" என்று அவர்களுக்குச் சொன்னார்............

போதுமா, அந்த அரிய கொடைகளின் பட்டியல்?

**8. இறைவனின் கட்டளையை மீறும்படி ஆதாமையும் ஏவாளையும் தூண்டியது யார்?**

*சாத்தான் என நாம் அழைக்கும் பசாசுதான் அவர்களைத் தூண்டியது.*

**9. "பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்து" என்கிறீர்கள். சில பாக்கியங்களையும் கூறினீர்கள். "பரிசுத்த அந்தஸ்து" என்றால் என்ன?**

*ஆதாமும் ஏவாளும் இறைவனின் திருவருளைப் பெற்றார்கள்; அதனால் கடவுளின் பிள்ளைகள் ஆனார்கள்; கடவுளின் வாழ்விலேயே ஒருவிதப் பங்குபெறும் 'வாய்ப்பும், உரிமையும், பேறும் பெற்றார்கள்; மோட்சம் அடைவதற்குரிய பேறுபலன்களை அடையத் தகுதியான செயல்களைச் செய்யும் வல்லமையும் அடைந்தார்கள். இப்படி இறைவனே விரும்பி, அவர்களது ஆன்மாவில் திருவருள் நிலையை நிறுவி, அவர்களுக்கு சுபாவத்திற்கு மேலான தத்துவங்களையும் சுதந்தரங்களையும் அளித்திருந்தார். இந்த மேலான நிலையைத்தான் "பரிசுத்த அந்தஸ்து" என்று கூறுகிறோம்.*

**10. பாவம் புரிந்ததால் அந்த பரிசுத்த நிலையை இழந்தார்கள் என்கிறீர்களா?**

*ஆம்; பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தை இழந்தது மாத்திரம் அல்ல. தங்களுக்கும் தங்கள் சந்ததியார் அனைவருக்குமே விண்ணுலக பாக்கியத்தையும் இழந்தனர்.*

**11. ஆதாம் ஏவாளின் பாவம் என்னைப் பாதிப்பது எப்படி?**

*பிறக்கும்போதே உமது ஆன்மாவில் அந்தப் பாவத்துடன்தான் பிறக்கிறீர்.*

**12. இது நியாயமான கூற்றாகத் தெரியவில்லையே!**

*என் நியாயமல்ல? மனுக்குலத்தின் தந்தையாகிய ஆதாம் தமக்கிருந்த உயிரையும், உடல் ஆற்றல்களையும் நமக்குத்*



*தரவில்லையா? பாவம் செய்யாது இருந்திருந்தால், இறைவன் தந்த மாபெரும் திருவருள் நிலையையும், அரிய கொடைகளையும் நமக்குத் தந்திருப்பார் அல்லவா? ஆனால் அந்த உயர் நிலையை இழந்தார். ஆதலால், தம்மிடமிருந்த சாதாரண நிலையையும் ஆற்றல்களையும்தான் அவர் நமக்குத் தர முடிந்தது. அத்துடன், பாவி என்ற இழி நிலையையும், பாவத்தின் விளைவுகளையும் நமக்குத் தந்தார். இதனால்தான் நாம் ஜென்மிக்கும்போதே பாவத்தின் விளைவுகளுடன் பிறக்கிறோம்.*

**13. இதை ஓர் உதாரணத்தால் விளக்குவீர்களா?**

*உமது தந்தை ஒரு கொலைகாரராக இருந்தார் எனக் கொள்வோம். உம்மை கொலைகாரனின் மகன் அல்லது மகள் என்றுதானே அனைவரும் கூறுவர்? அந்த இழி பெயரைப் போக்க இயலுமா? அல்லது, அது உண்மையல்ல என்று உண்மை நிலையை மாற்றத்தான் இயலுமா? பெற்றோரின் குற்றம் பிள்ளைகளையும் சாரும். ஆதாமும் ஏவாளும் நமது முதல் பெற்றோர். ஆதலின் அவர்களின் பாவம் நம்மையும் சாருகின்றது.*

**14. ஆதாம் ஏவாள் தங்கள் பாவத்தால் வேறு எதையும் இழந்தார்களா?**

*இறைவன் அளித்திருந்த மதி நுட்பத்தையும் ஒளியையும் மங்கச் செய்தது அவர்களின் பாவம். இறைவனின் கோபத்திற்கு ஆளாகினர். "நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு உழைக்க" வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர்களது கீழான சுபாவம் அவர்களுக்கு எதிராகப் போரிடத் தொடங்கியது. துன்பம், வியாதி, மரணம் முதலிய துயரங்களின்றி இருந்தவர்கள், பாவம் புரிந்தபின் அந்தத் துயர்களுக்கு ஆளாயினர். அறியாமை என்னும் காரிருள் அவர்களைச் சூழ்ந்தது. அவர்களின் பாவம் அவர்களது பிள்ளைகளையே பழிவாங்கியது: காயின் தன் சகோதரன் ஆபேலைக் கொலை செய்தான்.*

**15. அந்தத் தண்டனைகள் எல்லாம் எனக்கும் கிடைக்கின்றனவா?**

ஆம். அர்ச். சின்னப்பர் கூறுவதுபோல, "ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால் அநேகர் பாவிகளாக்கப்பட்டனர்." (உரோமர் 5:19) இந்த 'அநேகர்' ஆதாமின் பாவத்தினால் பாவிகளானபோதே, பாவத்தின் தண்டனைகளையும் பெற்றார்கள். உலகில் உள்ள தீமைகளே ஜென்மப் பாவத்திற்கு சான்றாக உள்ளதை சிந்திக்கவும்.

### 16. ஆதாம் ஏவாள் செய்த பாவம் என்ன பாவம்?

"கீழ்ப்படியாமை" என்று தெரிகிறது. என்ன விஷயத்தில் கீழ்ப்படியாமல் போனார்கள் என்பதைப்பற்றி நிச்சயமாக நமக்குத் தெரியாது. ஒரு குறிப்பிட்ட மரத்தின் கனியை சாப்பிடவேண்டாமென இறைவன் பணித்திருந்த கட்டளையை மீறினார்கள் என்பதுதான் நமக்குத் தெரியும். அது எந்தக் கனி, அல்லது "மரத்தின் கனி" எதைக் குறிப்பிடுகிறது என்பதைப்பற்றிய திட்டவட்டமான தகவல் கிடையாது.

### 17. ஆதாம் ஏவாளின் பாவம் என்னையும் பின்தொடர்வதைப்பற்றி வேதாகமத்தில் ஏதாவது குறிப்பு உண்டா?

"சர்வேசுரா சுவாமி, என்மீது இரக்கமாயிரும்!" என்ற இரக்க சங்கீதத்தில் (சங்கீத ஆகமம் 50:6) "நானோவென்றால் அக்கிரமத்தில் ஜென்மித்தேன்; என் தாயார் பாவத்தில் என்னைக் கருத் தரித்தாள்" என்ற வாக்கியத்தைக் கவனியுங்கள்.

### 18. ஜென்மப் பாவமின்றி பிறந்த மனிதரே கிடையாதா?

ஜென்மப் பாவமின்றி உற்பவித்தவர் கன்னிமரியாள் ஒருவர் மட்டுமே. யேசுவுக்கு முன்னோடியாக வந்த ஸ்நாபக அருளப்பர், தமது தாயின் வயிற்றில் இருந்தபோதே அர்ச்சிக்கப்பெற்றார். ஆனால், உற்பவித்த க்ஷணமுதல் ஜென்மப் பாவக் கறையே படாமல் இருந்தது கன்னிமரியாள் ஒருவர்தான். இதையே "அமல உற்பவம்" எனக் கூறுகிறோம்.



### 19. கன்னிமரியாளை "அமலோற்பவி," "நிர்மலா" என்றெல்லாம் அழைப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதில் அடங்கியுள்ள சத்தியம் என்ன?

திருச்சபையின் தொடக்க முதலே "அமலோற்பவ சத்தியத்தை" மக்கள் விசுவசித்து வந்தாலும், 1854-ம் ஆண்டில் தான் 9-ம் பத்திநாதர் என்னும் பாப்பரசர் இது வேத சத்தியம் என பிரகடனம் செய்தார். அவர் கூறியபடியே, "மிக பரிசுத்த கன்னிமரியம்மாள், மனுக்குல மீட்பர் யேசுக் கிறீஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டு சர்வ வல்லப கடவுளால் அளிக்கப்பெற்ற ஒரு சிறந்த உரிமையினாலும் அருளினாலும், அவளது உற்பவத்தின் முதல் வினாடியிலிருந்தே ஜென்மப் பாவத்தின் சகல கறைகளினின்றும் காப்பாற்றப்பட்டாள்" என்பதே உண்மை.

லூக்காஸ் எழுதியுள்ளபடி (லூக்காஸ் 1:28), தேவதூதன் அவளிருந்த இடத்தில் நுழைந்து, 'அருள் நிறைந்தவளே, வாழ்க!' என்றார். ஜென்மப் பாவக் கறையுடன் கன்னிமரி உற்பவித்திருந்தால், அவள் "அருள் நிறைந்தவளாக" இருப்பது இயலாது அல்லவா? ஆகவே, தேவதூதனின் மங்கள மொழியின் வாயிலாக இறைவன் கன்னிமரியாள் அமல உற்பவி என்பதை உறுதிப்படுத்துகிறார்.

### 20. எனது ஆத்துமத்திலிருந்து ஜென்மப் பாவத்தை அகற்றுவது எப்படி?

ஞானஸ்நானம் பெறுவதால் ஜென்மப் பாவத்தை நீக்கலாம். "ஒருவன் தண்ணீரினாலும் இஸ்பிரீத்துசாந்துவினாலும் மறுபிறப்பு அடையாதிருந்தால், சர்வேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன்" என்பது மீட்பர் யேசு பெருமானின் தெளிவான வார்த்தைகள். (அருளப்பர் 3:5).

### 21. ஞானஸ்நானம் பெறுமுன்னரே சில குழந்தைகள் இறந்துவிடுகின்றன. அவைகளுக்கு மோட்சப் பேரின்பம் கிடையாதா?

கிடையாது. அவர்கள் "லிம்போ" என்ற பாதாளத்திற்குச் செல்லுகின்றனர். இதைப்பற்றி பின்னர் உங்களுக்கு விரிவாகக் கூறுவோம்.




# 18

## யேசுநாதர் தமது பாடுகளை வெளிப்படுத்துகிறார்

**திருப்பாடுகள்:** யேசுநாதர் தாம் எருசலேமுக்குப் போகவும், மூப்பராலும் வேதபாரகராலும் ஆசாரியராலும் பயங்கரப் பாடுகள் படவும் சிலுவையில் அறையப்பட்டு மரிக்கவும், மரித்த மூன்றாம் நாள் கல்லறையைவிட்டு உயிர்த்தெழவும் வேண்டும் என்று தமது சீடர்களுக்கு அறிவித்தார். அவர்கள் இன்னும் உலக மகிமைக்கடுத்த எண்ணம் கொண்டவர்களாய் இருந்ததால் இதை நம்பவுமில்லை, முழுதும் கண்டுபிடிக்கவுமில்லை.

**புனித இராயப்பர் கண்டனம் பெற்றது:** புனித இராயப்பர் யேசுநாதரை தனியே அழைத்து, சுவாமி இது உமக்கு வராது இருக்கக்கடவது. இப்படி உமக்கு வரமாட்டாது என்று சொல்ல, யேசுநாதர் இராயப்பரை திரும்பிப் பார்த்து: "சாத்தானே, நீ என் பின்னாலே போ; எனக்கு நீ இடறலாயிருக்கிறாய். நீ சர்வேசுரனுக்கு அடுத்தவைகளையல்ல, மனிதர்களுக்கு அடுத்தவைகளையே சிந்திக்கிறாய்" என்றார்.

**பரித்தியாகம்:** யேசுநாதர் தம்மைப் பின்பற்றி வந்த ஏராளமான மக்களைப் பார்த்துக் கூறியதாவது: யாதொருவன் என் பின் வர மனதாய் இருந்தால், தன்னைத்தானே பரித்தி-



யாகம் செய்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின் செல்லக்கடவான். தன் பிராணனைக் காப்பாற்ற மனதாயிருக்கிறவன் அதை இழப்பான். என்னைப்பற்றி தன் பிராணனை இழப்பவனோ என்றால் அதை காப்பாற்றிக் கொள்கிறான். மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தன் ஆத்துமத்தை சேதப்படுத்தினால் அவனுக்குப் பிரயோசனம் என்ன? அல்லது தன் ஆத்துமத்திற்கு ஈடாக எதைக் கொடுப்பான்? ஒருவன் என்னைக் குறித்தும் என் வாக்கியத்தைக் குறித்தும் வெட்கப்படுவானாகில், மனுமகன் தமக்கும், பிதாவுக்கும், சம்மனசுகளுக்கும் உரிய மகிமைப் பிரதாபத்தோடு வரும்பொழுது அவனைக் குறித்து வெட்கப்படுவார். ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் என்னைப் பின்பற்றக்கடவான். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் என் பிதா அவனை கனப்படுத்துவார்.

**மறுரூபமாகிறார்:** யேசுநாதர் தமது பாடுகளைப்பற்றி வெளிப்படுத்தியதைக் கேட்ட அப்போஸ்தலர் துக்கத்தாலும் சந்தேகத்தாலும் அமிழ்ந்திப்போயிருந்தார்கள். அவர்களை திடப்படுத்தி தைரியத்தை வழங்கும்படி அவர் தமது தெய்வீகத்தின் மகிமையையும் மோட்ச பூங்காவில் இனி அவர்களுக்கு அளிக்கபடும் பேரானந்தத்தின் முன்சுவையையும் காட்ட திருவுளமானார்.

யேசுநாதர் இராயப்பரையும், இயாகப்பரையும், அருளப்பரையும் ஓர் உயந்த மலையின்மேல் கூட்டிக்கொண்டு போய் அவர்களுக்கு முன் மறுரூபமானார். அவரது முகம் சூரியனைப்போல் சுடர்விட்டுப் பிரகாசித்தது. அவரது ஆடைகள் வெண்பனியைப்போல் தூய வெண்மையாய் துலங்கியது. மோயீசனும் எலியாசும் அவரோடு பேசுகிறவர்களாகக் காணப்பட்டார்கள். அப்பொழுது இராயப்பர் யேசுநாதரை நோக்கி, சுவாமி, நாம் இங்கே இருக்கிறது நல்லது. தேவரீருக்கு சித்தமானால் இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோயீசனுக்கு ஒரு கூடாரமும், எலியாசுக்கு ஒரு கூடாரமும் ஆக மூன்று கூடா



ரங்களை அடிப்போமாக என்றார். அவர் இன்னும் பேசிக் கொண்டிருக்கையில் பிரகாசமுள்ள ஒரு மேகம் அவர்களுக்கு நிழலிட மேகத்தினின்று ஒரு குரலொலி உண்டாகி, "நம்முடைய நேசகுமாரன் இவரே! இவர் பேரில் நாம் பூர்ண பிரியமாயிருக்கிறோம். இவருக்கு செவிகொடுங்கள்" என்று ஒலித்தது. இதைக் கேட்டு சீடர்கள் முகம்குப்புற விழுந்து பயந்து நடுங்கினார்கள். அப்பொழுது யேசுநாதர் அவர்கள் அருகில் வந்து தொட்டு, எழுந்திருங்கள்; பயப்படாதீர்கள் என்றார். அவர்களோ தங்கள் கண்களை உயர்த்தி பார்க்கின்ற பொழுது, யேசுநாதர் ஒருவரை மட்டுமே அவர்களால் அங்கு காணமுடிந்தது. வேறு ஒருவரையும் அவர்களால் காண முடியவில்லை. மனுமகன் மரித்தோரினின்றும் உயிர்த்தெழும் வரையில் இந்த காட்சியைப்பற்றி ஒருவருக்கும் சொல்லாதேயுங்கள் என்று ஆண்டவர் அவர்களைப் பணித்தார்.

14537



# 19

## மரித்த லாசர் உயிர்பெற்றெழுகிறார்

**எருசலேமுக்கு வருகிறார்:** எருசலேம் நகருக்கு இரண்டு மைல் தொலைவில் பெத்தானியா என்ற ஒரு சிற்றூர் இருந்தது. அங்கு மார்த்தாள், மரியாள் என்னும் இரு சகோதரிகளும் இவர்களது சகோதரன் லாசரும் வாழ்ந்து வந்தார்கள். யேசுநாதரும் அப்போஸ்தலர்களும் அடிக்கடி இவர்களுடைய வீட்டில் தங்கி இளைப்பாறுவார்கள். யேசுநாதர் இக்குடும்பத்தை அதிகம் நேசித்து வந்தார். ஆண்டவர் யோர்தான் நதிக்கு கொஞ்சம் தொலைவில் இருக்கும் பொழுது லாசருக்கு கடின வியாதி கண்டது. அவரது சகோதரிகள் யேசுநாதருக்கு ஆள் அனுப்பி, ஆண்டவரே, உம்மால் மிகவும் சிநேகிக்கப் பட்டவன் வியாதியாய் இருக்கிறான் என்று அறிவித்தார்கள். இதைக் கேட்ட ஆண்டவர்: இந்த வியாதி மரணத்திற்கு ஏதுகரமான வியாதி அல்ல; இதனால் தேவகுமாரன் மகிமைப்படும் பொருட்டு தேவ தோத்திரத்துக்காக வந்த வியாதி இது என்று சொல்லி அனுப்பினார். பின்பு சீடர்களைப் பார்த்து, யூதேயாவுக்குப் போவோமாக என்றார். சீடர்கள், சுவாமி, இப்பொழுதுதான் உம்மை கொல்லத் தேடினார்களே, மீண்டும் அங்கே போகிறீரே என்றார்கள். "லாசர் இறந்து போனான். நீங்கள் விசுவசிக்கும் பொருட்டு நான் அங்கே இராததினால் உங்களினிமித்தம் சந்தோஷப் படுகிறேன். அவன் இடத்திற்குப் போவோமாக" என்றார் அவர். தோமையார் தனது சக அப்போஸ்தலர்களைப் பார்த்து, அவரோடு சாகப் போவோமாக என்றார். யேசுநாதர் பெத்தானியாவுக்கு வந்தபொழுது லாசர் கல்லறையில் வைக்கப்பட்டு நான்கு நாட்களாகி விட்டன. ஆண்டவர் வருகிறார் என்று கேள்விப்பட்ட உடனே மார்த்தாள் எதிர்கொண்டு போய், ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்றாள். யேசுநாதர் பதில் மொழியாக, "உத்தானமும் உயிரும் நானே, என்னில் விசுவாசமாய் இருக்கிறவன் இறந்தாலும் பிழைப்பான். நீ இதை விசுவசிக்கிறாயா?" என்றார். ஆம் ஆண்டவரே, நீர் கிறீஸ்துநாதரென்றும், இவ்வுலகத்துக்கு எழுந்தருளி வந்த சீவிய கடவு

ளின் குமாரன் என்றும் விசுவசிக்கிறேன் என்றாள். பின்பு வீட்டுக்குப் போய் தன் சகோதரியிடத்தில், ஆண்டவர் வந் திருக்கிறார், உன்னை [illegible]கிறார் என்றாள்.

**யேசுநாதர் க[illegible]ணீர் விடுகிறார் :** மரியாள் இதைக் கேட்டதும் ஆண்டவரிடம் விரைந்து சென்றாள். அவளுக்கு ஆறுதல் சொல்ல வந்திருந்த யூத கணங்கள், அவள் போகிற கோலத்தைக் கண்டதும் அவள் கல்லறைக்கு அழப்போகிறாள் என்று நினைத்து, அவளைப் பின்தொடர்ந்தார்கள். மரியாள் யேசுநாதரின் பொன்னடிகளைப் பற்றி, ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்று சொல்லி அழுதாள். அவள்கூட வந்த யூத மக்களும் அழுதார்கள். யேசுநாதர் தாமும் கண்ணீர் விட்டு அழுதார். இதைக் கண்டவர்கள் இவர் அவனை எவ்வளவு நேசித்தார் என்றார்கள்.

**புதுமை பொழிகிறார் :** லாசர் அடக்கம் செய்யப் பெற்ற கல்லறை ஒரு குகையில் இருந்தது. அதன் வாசலை ஒரு படலைக் கல்லால் மூடியிருந்தார்கள். மக்கள் பெருமள





வில் வந்து சூழ, யேசுநாதர் கல்லறையின் அருகில் வந்து மூடியிருந்த கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். மார்த் தாள், ஆண்டவரே, நாலு நாளாயிற்றே, நாறுமே என்றாள். யேசுநாதர் அவளைப் பார்த்து, நீ விசுவசித்தால் சர்வேசுரனு டைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்கு சொல்ல வில்லையா என்றார். பின்பு தமது கண்களை மேலே உயர்த்தி: "பிதாவே, தேவரீர் என் மன்றாட்டை கேட்டருளினபடியால் உமக்கு தோத்திரம் பண்ணுகிறேன். தேவரீர் என் மன் றாட்டை எப்பொழுதும் கேட்டருள்கிறீர் என்று நான் அறிந் திருக்கிறேன். ஆனாலும் நீர் என்னை அனுப்பினீர் என்று சூழ நிற்கிற மக்கள் விசுவசிக்கும் பொருட்டு இவர்கள் நிமித் தமே இதைச் சொன்னேன்" என்றார். இதன்பின், லாசரே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். உடனே செத்தவன் உயிர்பெற்று வெளியே வந்தான். அவன் கைகளும் கால்களும் கச்சையால் கட்டவும் அவன் முகம் பரிவட்டத்தால் மூடவும் பட்டிருந்தன. இவனை கட்ட விழ்த்துப் போக விடுங்கள் என்றார். இந்த புதுமையைக் கண்ட யூதரில் அநேகர் யேசுநாதரை விசுவசித்தார்கள்.

**யேசுநாதரை கொலை செய்ய தீர்மானிக்கின்றனர் :** சிலர் பரிசேயரிடத்தில் சென்று யேசுநாதர் செய்த இந்த புதுமையைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். பொறாமை பொங்கி வழிந்த பிரதான ஆசாரியரும் பரிசேயரும் உடனே ஆலோசனை சங்கத்தைக் கூட்டி, "நாம் என்ன செய்வோம்? இவனை இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் எல்லாரும் இவன் பேரில் விசுவாசமுள்ளவர்கள் ஆவார்கள். அப்பொழுது உரோமையர் வந்து, நமது இடத்தையும் மக்களையும் அழித்துப் போடுவார்களே" எனக் கூற, அந்த வருடத்தில் பெரிய குருவாயிருந்த கைஃபாஸ் அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு ஒன்றும் தெரியாது. மக்களெல்லாம் சேதமா காதபடிக்கு ஒரு மனிதன் மக்களுக்காக சாவது உங்களுக்கு நன்மை என்று நினையாது இருக்கிறீர்களோ" என்றான். (அவன் பொல்லாதவனாய் இருந்து, பெரிய குரு என்ற முறையில் உலக பாவங்களுக்காக யேசுநாதர் சாகப் போகி றார் என்று தீர்க்கதரிசனமாக மொழிந்தான்) அந்த நாள் முதல் அவர்கள் யேசுநாதரைக் கொலை செய்ய ஆலோசனை செய்து அதற்கான வழிகளை வகுத்துக் கொண்டிருந்தார்கள்.

# இதோ பதில்

**கேள்வி: 1.** *அருளப்பர் 16-வது அதிகாரம். 13, 14-வது வசனங்களில் "அவர்" என்னும் சொல் யாரைக் குறிக்கின்றது? நான் முகம்மது நபியைக் குறிப்பிடுகிறது என்கிறேன். இல்லை என்று தங்களால் ருஜுப்படுத்த முடியுமா?*

—**அகமது லெப்பை.** மேலப்பாளையம்.

**பதில்:** *மேற்கண்ட கேள்விக்குப் பதில் அளிக்குமுன் ஒன்றிரண்டு தர்க்க ரீதியான உண்மைகளை எடுத்துச் சொல்ல ஆசிக்கின்றேன். உலக ரீதியில் நடப்பதென்ன? ஒருவன் தன் பொருளை மற்றொருவன் திருடிவிட்டான் என்று வழக்குத் தொடுக்கின்றான். நீதிமன்றத்திற்கு வாதியும், பிரதிவாதியும் அழைக்கப்படுகின்றனர். விசாரணை தொடங்குகின்றது. வாதி பிரதிவாதியின் மீது சாட்டும் குற்றமும் தெரிவிக்கப் படுகின்றது. வாதி தன் குற்றச்சாட்டை நிரூபிக்கும்படி அழைக்கப்படுகின்றான், அதாவது மற்றவன் திருடினான் என்பதை நிரூபிப்பது குற்றம் சாட்டியவனின் கடமை. அவன் அவ்வாறு நிரூபிக்க வில்லையெனில் வழக்கு தள்ளப் படும். தான் களவு செய்யவில்லை என்பதை நிரூபிக்கும்படி பிரதிவாதி அழைக்கப்பட மாட்டான். நண்பர் கேட்டிருப்பது உலக ரீதிக்குப் பொருந்தாததாய் இருக்கின்றது. அரு. 16. 13. 14ல் "அவர்" என்பது முகம்மது நபியைக் குறிக்கின்றது என்று சொல்லுபவர், அதற்கு ஆதாரம் ஒன்றையும் கொடுக்காமல், "இல்லையென்று தங்களால் ருஜுப்படுத்த முடியுமா?" என்று கேட்கிறார். இவ்வாறு சொல்லுவது தர்க்க ரீதிக்குக் கொஞ்சமும் பொருந்ாது.*

*பைபிள் கத்தோலிக்க மறையால் புனிதமாகப் போற்றப் படும் நூல். ஏனெனில் அது கடவுளால் வெளிப்படுத்தப் பட்ட உண்மைகளை கொண்டிருக்கின்றது. இதற்குப் பொருள் கொடுக்க கடவுளின் அதிகாரப் பூர்வமான பிரதிநிதிக்கே உரிமையுண்டு. எவரும் வந்து, பைபிளிலுள்ள எவ்வாக்கியத்தையும் எடுத்து அதற்கு இதுதான் பொருள் என்று சொல்ல எவ்வித உரிமையுமில்லை. இது மிகவும் தெளிவானது.*



*இப்போது நண்பர் எழுப்பிய ஐயத்திற்கு வரலாம். அரு. 16. 13-14 வசனங்களைப் பார்ப்போம். "சத்திய இஸ்பிரீத்துவாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்தையும் உங்களுக்குப் படிப்பிப்பார். ஏனெனில் அவர் தாமாகப் பேசாமல், கேள்விப்பட்ட யாவையும் பேசி, வரப்போகிறவைகளையும் உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னை மகிமைப் படுத்துவார். ஏனெனில் என்னுடையதினின்று பெற்றுக் கொண்டு உங்களுக்கு அறிவிப்பார்".*

*சத்திய இஸ்பிரீத்துசாந்துவாகிய அவர், என்பதிலிருந்தே "அவர்" என்பது சத்திய இஸ்பிரீத்துசாந்துவை குறிக்கின்றது என்பது இலக்கண விதிப்படியும், பொருளின் படியும், தெளிவாக இருக்கும்போது அது முகம்மது நபியைக் குறிக்கின்றது என்று சொல்லுவது கொஞ்சமேனும் ஏற்றுக் கொள்ள முடியாதது. அவ்வாறு கூறுவதற்கு எள்ளளவேனும் ஆதாரம் காண்பிக்கப்படவில்லை.*

*கிறீஸ்து இவ்வார்த்தைகளைப் பேசிய சந்தர்ப்பத்தை சிந்தித்துப் பார்ப்போம். கிறீஸ்து பாடுபடப் போகின்றார் அதன்முன் தன் அப்போஸ்தலர்களோடு கடைசி இராப்போசனம் சாப்பிடுகிறார். விரைவில் தாம் அவர்களை விட்டுப் பிரியப் போவதைப் பற்றிப் பேசுகின்றார். அவரது சீடர்கள் துக்கப் படுகின்றார்கள். உடனே அவர்களுக்கு ஆறுதல் கொடுக்கின்றார். அதோடு தேற்றுதல் அளிக்கும் திவ்ய இஸ்பிரீத்து சாந்துவானவரை அனுப்புவதாக வாக்களிக்கின்றார். "நான் போகாதிருந்தால் தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரார். நான் போவேனாகில், அவரை உங்களிடத்தில் அனுப்புவேன்." அரு. 16. 7. "அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." அரு. 16. 8.*

*கிறீஸ்து வாக்களித்ததுபோல் திவ்ய இஸ்பிரீத்து சாந்துவானவர் யேசுநாதர் பரலோகத்துக்கு ஆரோகணமான பத்தாம் நாள், அக்கினி நாக்கு உருவில் அப்போஸ்தலர் மீது இறங்கி வந்தார். கிறீஸ்து முன் அறிவித்ததுபோல் திவ்ய இஸ்பிரீத்து சாந்துவானவர் வந்த பின்பு அப்போஸ்தலர்கள் கிறீஸ்துவின்*

Regd. No. M. 6743

போதனைகளை நன்கு புரிந்துகொண்டார்கள். அவருக்காக வீரத்துடன் தம் உயிரைக் கொடுத்தார்கள். இன்னும் வீரத்துடன் கிறீஸ்துவின் தெய்வீகத்திற்குச் சாட்சியாய் இருக்கின்றார்கள் கத்தோலிக்கர்.

அருளப்பர் 16. 13. 14-ல் குறிக்கப்பட்டிருக்கும் "அவர்" முகம்மது நபியைக் குறிக்கின்றது என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லாததால், அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? அப்பகுதியின் உட்கருத்தும், சரித்திரமும் நண்பர் அவர்களின் அபிப்பிராயத்துக்கு எவ்விதத்திலும் சாதகமாயில்லை.

---

## 'சகாயமாதா பொக்கிஷம்'

கிடைக்குமிடம்: அர்ச். தோமையார் ஜெனரல் ஏஜென்சீஸ்,
13, மீரான்சாகிப் தெரு, சென்னை—2.

இது $4\frac{1}{2}'' \times 3\frac{1}{2}''$ செப புத்தக வடிவில் 264 பக்கங்களைக் கொண்டது. இடைவிடாத சகாயமாதாவுக்கு நவநாட் செபமும், இன்னும் பல செபங்களும் இடம் பெறுகின்றன. 180 பக்கங்களுக்கு மேல் வாரத்தின் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் கலந்துகொள்ளுவதற்கான தனி வழிபாடு முறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. "மறைத்திரு R. அருளப்பர் சுவாமிகள் தாம் ஆர்வமுடன் எழுதி உதவிய திருப்பலி முறைகளைக் கையடக்கமான புத்தக வடிவில் வெளியிட அனுமதி அளித்ததற்கு எமது ஆழ்ந்த நன்றி" எனப் பதிப்பாளர் குறிப்பிடுகிறார்.

புது முறையின்படி பூசையில் பங்கு பெறவும் சகாயமாதாவைப் பார்த்து செபிக்கவும் இப்புத்தகம் மிகப் பயனுள்ளதாயிருக்கும்.

---

1-ம் பதிப்பு 12500 பெப்ருவரி 1962

CUM PERMISSU SUPERIORUM
*Imprimatur:* ✠ J. P. LEONARD S. J., *Archiepiscopus Maduraiensis*

Edited by Rev. Fr. M. Asirvatham, S. J., Post Box 11, Tiruchi—1
Printed and published at De Nobili Press, Madurai—8.

365/1.62

# மெய்யா விளக்கு

"உலகின் ஒளி நாமே" — கிறிஸ்துநாதர்

விளக்கு: 7 சுடர்: 3

மார்ச், 1962

## பாவம்

### 2. கர்மப் பாவம்

**22. கர்மப் பாவம் என்றால் என்ன?**

அவரவர் புத்தி விபரம் அறிந்த பிற்பாடு மனதுபொருந்திச் செய்கிற பாவம். ஜென்மப் பாவத்தைப்போன்று, இது ஆதித் தாய் தகப்பனாலே உண்டாகி நம்மோடு பிறப்பது அல்ல. நாமே கட்டிக்கொள்ளும் பாவமாயிருப்பதால் இதற்கு நாமே பொறுப்பாளியாயிருக்கிறோம்.

**23. கர்மப் பாவம் தகாத செயலைச் செய்வதில் மாத்திரம் அடங்கி இருக்கின்றது என்று சொல்லலாமா?**

கர்மப் பாவம் விலக்கப்பட்ட காரியத்தைச் செய்வதில் மாத்திரம் அடங்கி இருக்கின்றது என்று சொல்ல முடியாது. உதாரணமாக பிறர் பொருளைத் திருடுவது, கெட்ட ஆசைக்கு இடம் கொடுப்பது, பிறர் பெயரைக் கெடுப்பது, கருத் தடை செய்வது பாவமாகும். அதோடு ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் பூசைக்குப் போகாமலிருப்பதும் பாவமாகும். நமது கடமையைச் செய்யாமல் விடுவதும் பாவமாகும்.

*24. கர்மப் பாவம் எத்தனை வகைப்படும்?*

கர்மப் பாவம், சாவான பாவம், அற்பப்பாவம் என இரு வகைப்படும்.

*25. சாவான பாவம் என்ருல் என்ன?*

ஆத்துமத்தின் ஞான உயிராகிய தேவ இஷ்டப் பிரசாதத்தைப் போக்கடித்து நம்மை நரகத்துக்குப் பாத்திரவான்கள் ஆக்குகிற பாவம் சாவான பாவமாகும். சாவை விளைவிக்கின்ற சரீர வியாதியைப்போல், சாவான பாவம் நமது ஆத்துமத்துக்கு ஞான மரணத்தை வருவிக்கின்றது. தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொல்லுகின்றது.

*26. பைபிள் சாவான பாவத்தைப்பற்றி பேசுகின்றதா?*

அர்ச். சின்னப்பர் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் (6:21) அம்மக்களை நோக்கிக் கேட்கின்ருர்: "இப்போது நீங்கள் வெட்கப்படுகின்ற கிரிகைகளினுலே அப்போது உங்களுக்கு வந்த பலன் என்ன? அவைகளின் முடிவு மரணம்." இப்பாவமான செயல்களின் சன்மானம் மரணமானதால், அவைகளைச் சாவான பாவம் என்னலாம்.

*27. சாவான பாவம், அற்பப் பாவம் என்று சற்று விளக்கிக் காண்பிக்கமுடியுமா?*

கடவுளுக்கு எதிராய்த் தேவ தூஷணம் பேசுவது, கடன் திருநாட்களிலே காரணமின்றிப் பூசைக்குப் போகாமல் இருப்பது, மோக பாவத்திற்கு இணங்குவது, பெரிய தொகையைக் களவாடுவது போன்றவை சாவான பாவம் ஆகும்.

சிறு பொய் சொல்லுவது, சற்று பொறுமையில்லாமல் இருப்பது போன்றவை அற்பப் பாவமாகும்.

*28. சாவான பாவம், அற்பப் பாவம் எதில் வேறுபடுகிறது?*



சாவான பாவம் ஆன்மாவிலுள்ள தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொல்லுகின்றது. ஆனுல் அற்பப் பாவம் ஆன்மாவிலுள்ள தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொல்லாவிட்டாலும் அதைக் குறைக்கின்றது. ஆதலால் ஆன்ம சக்தி குறைந்து, தீமையை எதிர்க்கமுடியாமல் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ள ஏதுவாகின்றது. அற்பப் பாவம் சாவான பாவத்திற்கு வழி என்னலாம்.

*29. ஒரு குற்றம் சாவான பாவம் என்று எவ்வாறு அறியலாம்?*

முழு அறிவோடும், முழுச் சம்மதத்தோடும், கனமான காரியத்தில் குற்றம் செய்திருந்தால் அது சாவான பாவம் என்று அறியலாம். இந்த மூன்று நிபந்தனைகளில் ஏதாவதொன்று இல்லாமலிருந்தால் அது அற்பப் பாவம் ஆகும்.

*30. "முழு அறிவோடு" என்பதின் பொருளென்ன?*

தான் செய்கிற தகாத காரியம் கனமானதென்று மனச்சாட்சி அறிந்து கவனிக்காவிட்டால், அது சாவான பாவம் ஆகாது. ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்ளுவோம். நன்கு அறிந்து வெள்ளிக்கிழமை மாம்சம் சாப்பிடுவது சாவான பாவம். ஒருவன் வெள்ளிக்கிழமை என்பதை மறந்துவிட்டு மாம்சம் சாப்பிடுகின்ருன். தான் மாம்சம் சாப்பிடுவதை நன்கு அறிந்தாலும், அந்த நாள் வெள்ளிக்கிழமை என்பதை அறியாதிருப்பதால் அது பாவமாகாது.

*31. ஒன்று கடவுளுக்கு விரோதமான குற்றம் என்று அறிவேன், ஆனுல் அது சாவான பாவமா அற்பப் பாவமா என்று நிச்சயமில்லை. அப்படியிருந்தும் செய்கின்றேன். எத்தகைய பாவமாகும்?*

அது சாவான பாவமாகும். ஏனெனில் கடவுளுக்கு விரோதமாய் கனமான காரியத்திலேயும் நடக்க உன் சம்மதத்தை உன் செய்கையின் மூலம் வெளிப்படுத்துகின்ருய்.

உதாரணமாக ஒருவனிடமிருந்து ஒரு ரூபாய் களவு செய்வது சாவான பாவமா, அற்பப் பாவமா என்று நிச்சயமாய் அறியாமலிருக்கின்றேன். அப்படி இருந்தும் அந்த ரூபாயைக் களவு செய்கின்றேன். என் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. நான் நடந்துகொள்ளும் பாவம் சாவான பாவம். சாவான பாவம் என்று தெரிந்திருந்தால் செய்திருப்பேன் என்பதை நான் தெரிந்துகொண்ட முறை எடுத்துக்காட்டுகின்றது. பின்னுல், நான் செய்தது களவு, அற்பப் பாவம் என்று தெரிந்தாலும், நான் சாவான பாவம் கட்டிக்கொண்டு விட்டேன்.

### 32. "முழுச் சம்மதம்" என்றுல் என்ன ?

தேவ கற்பனையை முழு அறிவோடும், முழுச் சம்மதத்தோடும் மீறினுல்தான் சாவான பாவமாகும். பூரண சம்மதமில்லாவிட்டால் சாவான பாவமிராது. மட்டற்ற தயையுள்ள சர்வேசுரன், தம்மைவிட்டு அகன்றுபோகவும், தம்மை நிந்தித்து அவமதிக்கவும் விரும்பாத மனிதனை நித்திய நரகத்தில் தள்ள மாட்டார். ஆதலால் அரைத் தூக்கத்திலிருக்கும் போதாவது, வேறொரு விஷயத்தின் மேல் கவனமாயிருக்கும் போதாவது, ஒருவன் பாவமான காரியம் செய்ய நேரிட்டால் அது சாவான பாவமாகாது. முழுக் கவனமில்லாதபோது, முழுச் சம்மதமுமிராது.

அதேபோல் நமது முழுச் சம்மதமில்லாமலிருந்தும் ஒரு பாவத்தைச் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டால் அது சாவான பாவமாகாது. உதாரணமாக சம்மதம் கொடுக்காமலிருந்தும், தன் மிருகப் பலத்தைப் பிரயோகித்து ஒரு பெண்ணின் கற்பை அழிக்கின்றுன் ஒருவன். அதற்கு சம்மதத்தைக் கொடுக்கவே இல்லையெனில் அவளுக்கு அது பாவமாகாது.

### 33. ஒரு பாவம் அற்பப் பாவமா, சாவான பாவமா என்று சந்தேகமாயிருந்தால் என்ன செய்ய வேண்டும் ?

அத்தகைய சமயம் அக் காரியத்தைச் செய்யவே கூடாது. முதலாவது குருவிடம் சென்று அவரது ஆலோசனையைக் கேட்டபின்பு அவர் சொல்லுவதுபோல் நடக்கவேண்டும். மாருக ஒன்று சாவான பாவமாக இருக்கலாம் என்று சந்தேகம் உண்டாகியும், சந்தேகத்தை நிவர்த்தி செய்யாமல் அதைச் செய்தால் சாவான பாவம் கட்டிக்கொள்ளுவதாகும்.



### 34. "கனமான காரியம்" என்றுல் என்ன ?

மீறுகிற கற்பனையானது தன்னிலேயோ, அல்லது அதைச் சேர்ந்த விசேஷ காரணத்தினுலேயோ கனமானதாயிருக்க வேண்டும்.

உதாரணமாக ஆயிரம் ரூபாயைக் களவு செய்வது தன்னிலே கனமானது. ஒரு பரம ஏழையினிடமிருந்து ஒரு அணு எடுப்பதும் கனமான பாவமாகக்கூடும்.

### 35. எத்தனை அற்பப் பாவங்கள் சேர்ந்தால் ஒரு சாவான பாவமாகும் ?

எத்தனை அற்பப் பாவங்கள் சேர்ந்தாலும் அது ஒரு சாவான பாவம் ஆகாது. இதிலிருந்து அற்பப் பாவங்களையே கட்டிக்கொண்டிருக்கலாம் என்று தெம்பாய் இருந்துவிடக்கூடாது. ஏனெனில் அடிக்கடி அற்பப் பாவங்களைக் கட்டிக்கொண்டிருப்பவன், ஆன்மத் தளர்ச்சி அடைந்து நாளாவட்டத்தில் எளிதில் சாவான பாவத்தில் விழுந்துவிடுவான்.

### 36. ஒரு பாவம் கட்டிக்கொள்ள எண்ணிய ஒருவன், சந்தர்ப்பம் கிடைக்காததால் அப்பாவத்தைக் கட்டிக்கொள்ளவில்லை. அவன் பாவம் செய்தான் என்னலாமா ?

சந்தர்ப்பம் கிடைக்காததால் பாவம் கட்டிக்கொள்ளவில்லை என்றுலும், எப்போது பாவம் கட்டிக்கொள்ள மனதில் நிச்சயித்துவிட்டானே அப்போதே பாவம் கட்டிக்கொண்டு விட்டான். ஒரு பெண்ணைத் தகாத ஆசையோடு நோக்குகின்ற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபச்சாரம் செய்துவிட்டான் என்கின்றுர் கிறீஸ்து (மத். 5 : 28).

செய்கையிலே பாவம் கட்டிக்கொள்ளுகிறவன் மனதில் பாவம் கட்டிக்கொள்ளுகிறவனைவிடக் கனமான பாவம் கட்டிக்கொள்ளுகின்ருன்.

*37. சாவான பாவத்தோடு மரிப்பவர்கள் எங்கே செல்லுகின்ருர்கள்?*

சாவான பாவத்துடன் மரிப்பவர்கள் அணையாத, நித்திய அக்கினி உள்ள நரகத்தில் தள்ளப்படுவார்கள். கனமான பாவம் கட்டிக்கொண்டவர்கள், "அக்கினியும் கெந்தகமும் எரிகிற தடாகத்திலே பங்கடைவார்கள். இரண்டாம் மரணம் இதுவே" (காட்சி. 21:8) என்று காட்சியாகமத்தில் வாசிக்கின்ருேம்.

*38. ஒருவன் சாவான பாவம் கட்டிக்கொண்டால், அதிலிருந்து விடுபட என்ன செய்யவேண்டும்?*

தகுந்த தயாரிப்போடு பச்சாத்தாபம் எனும் தேவதிரவிய அனுமானத்தைப் பெற்ருல் எந்தச சாவான பாவமும் மன்னிக்கப்படும்.

*39. நான் பாவம் கட்டிக்கொண்டேன் என்று எப்படி அறியலாம்?*

நமது மனச்சாட்சியே நமது பாவத்தைச் சுட்டிக் காட்டும்.

*40. மனச்சாட்சி என்ருல் என்ன?*

இது நல்லது, இது கெட்டது என்று அறியும் வயது வந்தவனைப் புத்தி விபரம் அறிந்தவன் என்கின்ருேம்.

மனச்சாட்சி அறிவின் குரல் அல்லது கடவுளின் குரல் என்று அழைக்கப்படும்.

நாம் செய்யப்போகின்ற கிரிகை நல்லதோ கெட்டதோ என்று நமது புத்தி தீர்மானிப்பதே மனச்சாட்சியாகும். எது நல்லது, ஆதலால் செய்யப்படவேண்டும்; எது தீயது, ஆதலால் விலக்கப்படவேண்டும் என்று எச்சரித்துக்கொண்டே இருக்கும். ஆதலால்தான் மனச்சாட்சியின் சொற்படி நடக்கிறவன் ஒருக்காலும் கடவுளுக்குத் துரோகம் செய்யமாட்டான்.



*41. நான் பாவம் செய்யத் தூண்டப்பட்டால் அது பாவமாகுமா?*

பாவமாகாது. கிறீஸ்து வனந்தரத்தில் சோதிக்கப்பட்டார். ஆனல் அவர் சோதனைகளை ஜெயித்தார்.

*42. சோதனை என்ருல் என்ன?*

பாவம் செய்யும்படி நம்மைத் தூண்டுவது, அழைப்பது சோதனையாகும். சோதனை பசாசினிடமிருந்தோ, அல்லது நமது சுபாவத்திலிருந்தோ உண்டாகலாம்.

ஆதலால் சோதனை தன்னிலே பாவமாகாது. பாவத்திற்கு இட்டுச் செல்லும் கதவுத் திறப்பு என்னலாம். கதவு மூடியிருந்தால் பாவமில்லை; கதவு திறந்தால் பாவம் நுழைகின்றது. மனம் பொருந்தி நீயே தீயதைத் தெரிந்து ஏற்றுக்கொள்ளும்வரை பாவம் இல்லை.

*43. இதைப்பற்றி வேதாகமம் சொல்லுவதென்ன?*

"அவனவன் தன் சுய இச்சைகளால் இழுபட்டு, மருண்டு சோதனைப்படுகின்ருன். பின்பு ஆசாபாசம் கர்ப்பந்தரித்துப் பாவத்தைப் பிறப்பிக்கும். பாவமோ முற்றினல், மரணத்தைப் பிறப்பிக்கின்றது," (1 14-15) என்கின்ருர் இயாகப்பர்.

*44. சோதனையை ஜெயிக்கப் போதுமான அருள் கொடுக்கப்படுகின்றதா?*

"சர்வேசுரன் பிரமாணிக்கமுள்ளவர்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடம் கொடார். ஆனல் நீங்கள் சோதனையைத் தாங்கும்படி சோதனையோடு வழியும் பண்ணுவார்" (1 கொரிந். 10:13). அர்ச்சியசிஷ்டவர்கள்கூட சோதனைக்கு உள்ளானர்கள்,

ஆனால் ஆண்டவரின் அருளைக்கொண்டு வெற்றி பெற்றார்கள்.

### 45. சோதனை வரும்போது என்ன செய்யவேண்டும்?

சோதனை வரும்போது ஆண்டவரின் உதவியை நாடி செபிக்கவேண்டும். கோவிலின் அருகிலிருந்தால், அங்கு சென்று, அங்கிருக்கும் திவ்ய நற்கருணைநாதரை நோக்கி வேண்டுவது மிகவும் பலனளிக்கும். கன்னித்தாய் மரியையும் நோக்கி வேண்டுவது உதவியாயிருக்கும்.

### 46. சோதனையை முழுவதும் தவிர்க்கமுடியுமா?

பாவத்திற்கு ஏதுவான சந்தர்ப்பங்களை நாம் விலக்கலாம். ஆனால் சோதனையை முழுவதும் தவிர்ப்பது இவ்வுலகில் இருக்கும்வரை முடியாதது.

### 47. பாவத்திற்கு ஏதுவான சந்தர்ப்பம் என்றால் என்ன?

ஒரு குடிகாரனுக்கு அவன் அடிக்கடி போகின்ற மதுக்கடையும், தகாத கெட்ட புத்தகங்களைப் படிக்கின்றவனுக்குக் கெட்ட புத்தகமும், எவளுடன் அடிக்கடி பாவம் கட்டிக் கொண்டானோ அவளும், பாவத்திற்கு நெருங்கிய சந்தர்ப்பங்களாகும். அவைகள் முழுவதையும் தவிர்க்கவேண்டும் அதோடு அவைகளை எட்டியவைகளாக ஆக்கப் பிரயாசைப் பட வேண்டும்.

### 48. சாவான பாவம் கட்டிக்கொண்ட பின்பு தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பெற முடியுமா?

பாவத்திற்காக உத்தம மனஸ்தாபப்பட்டு, பாவசங்கீர்த்தனம் செய்தால், தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பெற முடியும். அதோடு உருக்கமாக வேண்டிக்கொண்டோமானால் உதவி வரப்பிரசாதங்களும் கிடைக்கும். பாவ வாழ்க்கையிலிருந்து அருள் வாழ்க்கை நடத்த ஆண்டவரின் உதவி வரப்பிரசாதம் அவசியம்.

இத்தகைய உதவி வரப்பிரசாதங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பது பாவமாகும்.



# திவ்விய யேசுவின் திரு வரலாறு

## 20

## குருத்து ஞாயிறு

**யேசுநாதர் வெற்றி வீரராய் எருசலேமில் பிரவேசிக்கிறார்:** யேசுநாதர் எருசலேமுக்கு அண்மையில் காணும் ஒலிவேத் மலை முகட்டின் அருகே உள்ள பெத்பாகே ஊரில் வந்தபொழுது, இரு சீடர்களை அழைத்து, "நீங்கள் பட்டணத்திற்குள் போங்கள்; அங்கே ஒரு கழுதையும் இன்னும் ஒருவரும் ஏறாத அதன் குட்டியையும் காண்பீர்கள். அவைகளை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள். யாராவது ஏன் என்று கேட்டால், இது ஆண்டவருக்கு தேவை என்று சொல்லுங்கள்" என்றார். அப்படியே அந்த இரு சீடர்களும் சென்று கழுதையையும் குட்டியையும் அவிழ்த்துக்கொண்டு வந்து அதன்மேல் தங்கள் ஆடைகளை விரித்து மேலே அவரை ஏறி உட்காரச்செய்தார்கள். பாஸ்கா பண்டிகை கொண்டாட வந்திருந்த ஏராளமான மக்கள் ஆடைகளை வழியில் விரித்தார்கள். வேறு சிலர் மரக்கிளைகளை ஒடித்து தங்கள் கையில் பிடித்துக் கொண்டு, அவருக்கு முன்னும் பின்னுமாக, "தாவீதின் குமார



னுக்கு ஓசன்னா! சர்வேசுரன் நாமத்தினால் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர். உன்னதங்களில் ஓசன்னா!" என்று ஆர்ப்பரித்த வண்ணம் சென்றனர்.

**எருசலேம் அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனம்:** இத்தகையதொரு பெரிய ஆர்ப்பரிப்பைக் கண்டு எருசலேம் நகரே கதிகலங்கியது. காய்மகாரம் கொண்ட பரிசேயர், உமது சீடர்களை சத்தம் செய்யாதபடி அதட்டும் என்றனர். இவர்கள் பேசாமல் இருந்தால் கற்களே கூப்பிடும் என்றார் திவ்ய யேசு. (அவர் மரிக்கும் வேளையில் கற்பாறைகள் பிளந்தன) ஆண்டவர் பட்டணத்துக்கு சமீபமாய் வந்து அதைப் பார்த்து கண்ணீர் விட்டுக் கூறியதாவது: "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளை கொலைசெய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களை கல்லால் எறிகிறாயே. கோழியானது தன் குஞ்சுகளை தன் இறக்கையின் கீழ் அணைத்துக்கொள்ளுகிறதுபோல உன் மக்களையும் அணைத்துக்கொள்ள விரும்பினேன். உனக்கு மன



மில்லாமல் போயிற்று. உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது உன் சமாதானத்துக்கு உரியவைகளை நீ அறிந்திருந்தாலல்லோ நலமாக இருக்கும். ஆனால் இப்பொழுது அவைகள் உன் கண்ணுக்கு மறைவாய் இருக்கின்றன. ஒரு காலத்தில் எதிரிகள் வந்து உன்னைச் சுற்றிலும் அகழி வெட்டி, வளைந்து கொண்டு எப்பக்கத்திலும் நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் மக்களையும் தரை மட்டமாக்கி கல்லின்மேல் கல் நிற்க விடார்கள். ஏனெனில் உன்னை சந்திக்கவந்த காலத்தை நீ அறியாமல் போனாய்." (கி. பி. 70-ம் ஆண்டில் இந்த தீர்க்கதரிசனத்தை உரோமையர் நிறைவேற்றினார்கள்.)

**ஆலயப் பிரவேசம்:** யேசுநாதர் தேவாலயத்தில் பிரவேசித்தார். குருடரும் முடவரும் அவர் அருகில் வரவே அவர்களையெல்லாம் அவர் குணமாக்கினார். அவர் செய்த புதுமைகளையும், தாவீதன் குமாரனுக்கு ஓசன்னா என்று சிறுவர் முழக்கமிடுகிறதையும் பிரதான ஆசாரியரும் வேத பாரகரும் கண்டு வெறியர்களாக மாறி, இவர்கள் சத்தம் போடுகிறதை கேட்கிறீரோ என்றார்கள். யேசுநாதர், ஆம், கேட்கிறேன். சிறுவரின் வாயினின்றும் பாலகரின் வாயினின்றும் உமது துதியை பூரணமாக்கிக் கொண்டீர் என்னும் திருமொழியை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையோ என்றார். பாமர மக்களில் அநேகர் யேசுநாதரை காணவிரும்பி அப்போஸ்தலர் வழியாக தாங்கள் விரும்பியதை அடைந்து கொண்டார்கள். அவர்கள் முன்பாக மனுமகன் மகிமைப்படுகின்ற நேரம் வந்தது. மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: கோதுமை மணி நிலத்திலே விழுந்து அழியாவிட்டால் அது தனியே கிடக்கும்; மடிந்தால் மிகுந்த பலனைத் தரும் என்று சொல்லி, தமக்கு அடுத்து நிகழ இருக்கும் தமது திரு மரணத்தை அறிவித்தார். அதன்பின் அவர் பெத்தானியாவிற்குச் சென்று இரவுப்பொழுதை அங்கு கழித்தார்.

145371

# 21

## துஷ்ட குடியானவர்களின் உவமை

**உவமையின் கருத்து:** யேசுநாதர் தமது மரணத்துக்கு முன் எஞ்சியிருந்த குறுகிய நாட்களில் காலைமுதல் மாலைவரை தேவாலயத்தில் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். பாஸ்காப் பண்டிகை கொண்டாட அங்கு குழுமியிருந்த ஏராளமான மக்கள் அவரது அமிர்த பிரசங்கத்தைக் கேட்க வந்தார்கள். பிரதான ஆசாரியரும் பரிசேயரும் தம்மைக் கொலை செய்ய ஆலோசனை செய்வதை அறிந்த அவர், அவர்களை கடைசி முறையாக மனம் திருப்ப கீழ்க்காணும் உவமையைக் கூறி தமது திரு மரணத்தினால் அவர்கள் அடையும் படுபாதகத்தையும், அதனால் யூத இனத்தாருக்கு வரும் கடின தண்டனையையும் காட்ட திருவுளம் கொண்டார்.

**உவமை இதுதான்:** ஒரு நிலப்பிரபு ஒரு திராட்சை தோட்டத்தை உருவாக்கி, சுற்றிலும் வேலி அடைத்து, அதில் ஒரு ஆலையும் நாட்டி, ஒரு கோபுரமும் கட்டி, குடியானவர்களுக்கு குத்தகைக்கு விட்டு தூர தேசத்திற்குப் போயிருந்தான். கனி காலம் வந்ததும் தனக்கு சேரவேண்டிய பலன்களை வாங்கிவர தனது ஊழியரில் ஒருவனை அனுப்பினான். குடியானவர்களோ, அவர்களைப் பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனை கொலை செய்து, மற்றொருவனை கல்லால் எறிந்து கொன்றுபோட்டனர். மீண்டும் எசமான் முன் அனுப்பினவர்களைவிட அதிகமான வேறு ஊழியர்களை அனுப்பினான். அவர்களையும் அப்படியே செய்தார்கள். இறுதியாக அவன் தன் நேச மைந்தனை அனுப்பினால் பயப்படுவார்கள் என்று எண்ணி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான். குடியானவர்கள் இவனைக் கண்டவுடனே, இவனே முதலாளியின் சொத்துக்கு சுதந்தரவாளி, இவனைக் கொன்றுபோட்டால் இந்த சொத்து எல்லாம் நம்முடையதாகிவிடும்; வாருங்கள், இவனைக் கொன்றுபோடுவோம் என்று சொல்லி,



அவனைப் பிடித்து திராட்சை தோட்டத்திற்கு வெளியே தள்ளி, கொன்றுபோட்டார்கள். அப்படியிருக்க திராட்சை தோட்டத்தின் எசமான் வரும்பொழுது அவர்களை என்ன செய்வான் என்று யேசுநாதர் கேட்டார். அவர்கள் பதில் மொழியாக, அந்த கொடியருக்கு கடின தண்டனையிட்டு, காலத்திலே தக்க பலனை தரத்தக்க வேறே குடியானவர்களுக்கு தன் திராட்சை தோட்டத்தை குத்தகையாகக் கொடுப்பான் என்றார்கள். இதன்பின் யேசுநாதர் சொல்வார்: அப்படியே சர்வேசுரனுடைய இராச்சியமானது உங்களிடத்திலிருந்து எடுபட்டு அதிகப் பலனை தருகிற மக்களுக்கு கொடுக்கப்படும்.

இதைக் கேட்ட உடனே தங்களைக் குறித்துத்தான் இந்த உவமையை சொன்னாரென்று பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அறிந்து அவரைப் பிடிக்கத் தேடினார்கள். ஆனால் மக்கள் அவரை பெரிய தீர்க்கதரிசி என்று எண்ணியிருந்த காரணத்தால் இந்த எதிரிகள் அவருக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை.

**சதிகாரன்:** யேசுநாதரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனான யூதாஸ் இஸ்காரியோத்தின் இதயத்தில் பேய் குடிபுகுந்தது. இவன் பிரதான ஆசாரியரிடத்தில் போய், "நான் யேசுநாதரை காட்டிக்கொடுத்தால் எனக்கு என்ன கொடுப்பீர்கள்?" என்று கேட்டான். யேசுநாதரைப் பிடித்து கொலைசெய்ய திட்டம் வகுத்து செயலுக்காகக் காத்திருந்த அவர்களுக்கு யூதாஸ் இஸ்காரியோத்தின் எதிர்பாராத இனிப்புப் பேச்சு அவர்களுக்கு தெவிட்டாத தேனாக இருந்தது. அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசு கொடுப்பதாக உடன்பட்டார்கள். அந்த நாள் முதல் அவன் யேசுநாதரைக் காட்டிக்கொடுக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

# இதோ பதில்

**கேள்வி:** *முஸ்லிம் மதத்திற்கும் கிறிஸ்தவ மதத்திற்கும் உள்ள சில வேறுபாடுகளை ஒன்றாக இணைத்தால் இரு மதமும் ஒன்றே என்ற நிலை வருமென நான் நினைக்கிறேன்.*

—அப்துல்அசீஸ், *கோயம்புத்தூர்.*

**பதில்:** நண்பர் அசீஸ் மகமதிய மதத்திற்கும் கிறீஸ்துவ மதத்திற்கும் சில வேறுபாடுகள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றார். அந்த வேறுபாடுகளை ஒன்றாக இணைத்தால் இரண்டு மதங்களும் ஒன்றாகிவிடும் என்று தன் அபிப்பிராயத்தை வெளியிடுகின்றார். இந்த வேறுபாடுகளையும் எடுத்துரைக்கின்றார். மகமதிய மதத்தவர் பிசாசு என்பதை, கிறீஸ்துவர் பசாசு என்பதும்; கிறீஸ்துவர்கள் ஆண் பெண் இருபாலாரும் ஒன்றாக வணங்கும்போது, மகமதியர் அப்படி வணங்குவதில்லை என்பதும்; கிறீஸ்துவப் பெண்கள் தலை முக்காடு அணியும் போது, மகமதியப் பெண்கள் முழுவதும் கோஷா என்பதும் வேறுபாடுகள் என்கிறார். இவைகள் இரு மதங்களை வேறு படுத்திக் காட்டும் பேதங்கள் என்கிறார்.

ஆனால் இரு மதங்களின் கோட்பாடுகளை நன்கு அறிந்தவர்களுக்கு இத்தகைய வேறுபாடுகள் அவ்வளவு முக்கியமானவையல்ல என்பது புலப்படும். இந்த வேறுபாடுகளை ஒன்றாக இணைத்தாலும், இரண்டு மதங்களும் ஒன்றாகி விடாது; ஏனெனில் இரண்டையும் வேறுபடுத்திக்காட்டும் அடிப்படைக் கொள்கைகள் பல உள்ளன.

கடவுள் ஒருவர்; ஆனால் அவர் மூன்று ஆட்களாயிருக்கின்றார்; இந்த மூன்று ஆட்களுக்கும் சுபாவத்திலேயோ, சக்தியிலேயோ, ஞானத்திலேயோ, வேற்றுமை கிடையாது. இந்த மூன்று ஆட்களில் இரண்டாவது ஆளாகிய சுதனாகிய சர்வேசுரன் மனித அவதாரம் எடுத்து, தனது உயிரைக் கொடுத்து மனுக்குலத்தை மீட்டு இரட்சித்தார். இந்த கிறீஸ்துவானவர் உண்மையான மனிதனும் உண்மையான கடவுளுமாயிருக்கின்றார். தனது தெய்வீகத்தைப் புதுமைகள் மூலம் நிருபித்திருக்கின்றார். மனுக்குலம் ஈடேற்றம் அடைய அவசியமான எல்லா உண்மைகளையும் கிறீஸ்து உலகுக்குப் போதித்தார்;



அப்போதனையைத் தொடர்ந்து நடத்த கத்தோலிக்கத் திருச்சபையை ஏற்படுத்தினார். அவர் நிறுவிய கத்தோலிக்கத் திருச்சபையில் உலகமுடியுமட்டும் தான் தொடர்ந்து சீவிப்பதாக வாக்களித்திருக்கின்றார். கிறீஸ்து உலகை மீட்டதால், கிறீஸ்து உலகுக்கு வேண்டிய உண்மைகளை எல்லாம் போதித்தால், கிறீஸ்துவுக்குப் பிறகு வேறு தீர்க்கதரிசி உலகுக்கு வர அவசியமில்லை. அதோடு தன்மூலமாகவல்லாது வேறு எவ்வழியின் மூலமாயும் எவரும் பிதாவை அடைய முடியாதென்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியுள்ளார். ஒவ்வொருவரும் மரித்தவுடன் கடவுளால் தீர்வையிடப் படுவார்கள். நல்லவர்கள் நித்திய மோட்ச சம்பாவனையையும், தீயவர்கள் நித்திய நரக ஆக்கினையையும் அனுபவிப்பார்கள். மோட்சத்தில் மணம் செய்வதுமில்லை, இல்லற இன்பம் அனுபவிப்பதுமில்லை. கடவுளின் சம்மனசுக்களைப் போலிருப்பார்கள். கடவுளை முகமுகமாய்த் தரிசிப்பதே மோட்ச இன்பமாகும். கத்தோலிக்க மறையின் சில முக்கியமான போதனைகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன.

மகமதிய மதம் கடவுள் ஒருவர் என்பதை ஒத்துக்கொள்ளுகின்றது; ஆனால் அவர் மூன்று ஆட்களாயிருப்பதை மறுக்கின்றது. அவர்கள் கொள்கைப்படி கிறீஸ்துவானவர் ஒரு தீர்க்கதரிசியாயினும் அவர் கடவுளல்ல. கிறீஸ்துவின் தெய்வீகத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதால், கத்தோலிக்கத் திருச்சபை போதிக்கும் உண்மைகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளுவதில்லை என்னலாம். மகமதியர் கொள்கைப்படி மோட்சமானது சிற்றின்பமும் காமமும் அனுபவிக்கும் ஒரு இடமாகத் தோன்றுகிறது.

இவைகளை எல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால், நண்பர் அசீஸ் சொல்லுவதுபோல், இரண்டு மதங்களும் ஒன்றாக முடியாது என்பது தெளிவு; ஏனெனில் ஒன்றுக்கொன்று முரணான, வேறுபட்ட கொள்கைகள் இவைகளில் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.

மேலும் திறந்த மனப்பான்மையோடு பழைய ஏற்பாட்டை ஆராய்ந்து பார்த்தால், அதில் உலக மீட்பர் முன்னறிவிக்கப் பட்டிருப்பதையும், அவர் எத்தகையவர் என்பதையும் அறிவோம். புதிய ஏற்பாட்டை ஆராய்ந்து பார்த்தால், கிறீஸ்துவே பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்ட மீட்பர் என்பது தெளிவாகும்

14537.

Regd. No. M. 6743

Statement about ownership and other particulars about newspaper POYYA VILAKKU to be published in the first issue every year after the last day of February.

## FORM IV

(See Rule 8)

| | | | |
|---|---|---|---|
| 1 | Place of Publication | : | Madurai-8 |
| 2 | Periodicity of its Publication | : | Monthly |
| 3 | Printer's Name | : | Rev. Fr. A. S. Durairaj |
| | Nationality | : | Indian |
| | Address | : | Madurai-8 |
| 4 | Publisher's Name | : | Rev. Fr. A. S. Durairaj |
| | Nationality | : | Indian |
| | Address | : | Madurai-8 |
| 5 | Editor's Name | : | Rev. Fr. M. Asirvatham, S.J. |
| | Nationality | : | Indian |
| | Address | : | Post Box No.II, Tiruchirapalli-I |
| 6 | Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | | Very Rev. Fr. Laurence C. Fernandes, S.J. Provincial's House, St. Mary's, Dindigul |

I, Rev. Fr. A. S. Durairaj, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date
Ist March 1962

Rev. Fr. A. S. Durairaj
*Publisher.*

1-ம் பதிப்பு 12500 மார்ச் 1962

CUM PERMISSU SUPERIORUM
*Imprimatur:* ✠ J. P. LEONARD S. J., *Archiepiscopus Maduraiensis*

Edited by Rev. Fr. M. Asirvatham, S. J., Post Box 11, Tiruchi—1

Printed and published at De Nobili Press, Madurai—8.